Date.19.02.2026.

**கூடுதல் மாவட்ட நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் )**

**விழுப்புரம்.**

OS.166/2023

**வா.சா. 1**

**பெயர். திரு.ராஜேந்திரன்**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு உதவியாளர் அவர்களால் சத்தியபிராமணம் செய்விக்கப்பட்டார்.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**:-

கட்டிடத்தை அளக்க நீதிமன்ற ஆணையருடன் வந்த பொறியாளர்(என்ஜினியர்) பெயர் எனக்கு தெரியாது. சாட்சி தற்போது தனசேகரன் என்று கூறுகிறார். அவரை நான் கூப்பிட்டு வந்தேனா? அல்லது நீதிமன்ற ஆணையர் கூப்பிட்டு வந்தாரா? என்றால் நான் கூப்பிடவில்லை நீதிமன்ற ஆணையர்தான் அவரை கூப்பிட்டு வந்தார். நான் இந்த என்ஜினியர் தான் வந்து பார்க்க வேண்டும் என்று மனு ஏதாவது போட்டேனா என்றால் அப்படி மனு எதையும் நான் போடவில்லை. நீதிமன்ற ஆணையர் இடத்தை பார்வையிட்டு ஒரு அறிக்கை தயார் செய்து போட்டுள்ளார் என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையாளர் தனது அறிக்கையில் எனது இடத்தை சுற்றி தண்ணீர் நிற்கிறது என்று ஒரு அறிக்கை போட்டுள்ளார் என்றால், அது குறித்து எனக்கு ஞாபகம் இல்லை. என் வீட்டிற்கு பக்கத்தில் வீடு எதுவும் அப்போது கட்டப்படவில்லை என்றால், சரிதான். எனது வீட்டின் கழிவு நீர் எனது பக்கத்து இடத்தில் வீட்டை சுற்றி தேங்கியது என்றால் சரிதான். அப்போது அங்கு கால்வாய் இல்லை தற்போது கால்வாய் கட்டி விட்டார்கள். நான் முதல் மாடி கட்டிய காலத்தில் அங்கு கால்வாய் கட்டப்பட வில்லை என்றால் சரிதான். தற்போது தான் கால்வாய் கட்டினார்கள். வீட்டு உபயோகத்திற்கு நான் தினமும்

பயன்படுத்தும் தண்ணீர் ஒரே இடத்தில் தான் தேங்கி நிற்கிறது என்றால் சரிதான். அந்த தண்ணீர் தேங்கி நிற்கும் இடத்தில் தான் முதல் மாடி கட்டிடத்திற்கு சாரம் போட வேண்டும் என்றால், அப்போது சாரம் போட வேண்டிய அவசியம் எதுவும் இல்லை. சாரம் போட்டு தான் முதல் மாடி கட்ட முடியும் என்றால் சரிதான். நான் அந்த இடத்தில் இருந்த தண்ணீரை எடுத்து விட்டு, சாரம் போட நடவடிக்கை எடுக்கவில்லை என்றால், அதற்கான அவசியம் இல்லை. தண்ணீரை காலி செய்யுங்கள் என்று அவர்கள் சொல்லவில்லை. பிரதிவாதி பலமுறை என்னிடம் இந்த இடத்தில் தண்ணீர் விடாதீர்கள், நாங்கள் முதல் மாடி கட்டுவதற்கு சாரம் போட வேண்டும் என்று பலமுறை என்னை கேட்டார். என்றால் சரியல்ல என்னை ஒருமுறை கூட கேட்கவில்லை. தண்ணீர் நிற்கும் இடத்தில் முதல் மாடியில் சுமார் 6 அல்லது 6 1/2 அடி லின்டன் அளவு வரை இருக்கும் என்றால் சரிதான். அதற்கு மேல் கட்ட வேண்டும் என்றால் நான் தண்ணீரை வெளியேற்றம் செய்ய வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. அவர் ஒருமுறை கூட என்னிடம் கேட்கவில்லை.

**(குறுக்கு விசாரணை பகுதியாக நிறுத்திவைக்கப்பட்டு ஒத்திவைக்கப்படுகிறது.)**